அழகிய கலை நயம் மிக்க
புதுமையான
22 KT தங்க
நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி; 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பெண்மைக்கு
மெருகேற்றும் நிளைக்கு
எழிலூட்டும் தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

சுடர்- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 முஹறம் பிறை 5 (10-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்- 251

ஆஸ்பத்திரித் தாக்குதலை ஆட்சேபித்து

# 'ஷெல்' துண்டை ஏந்தியவாறு டாக்டர்கள், ஊழியர் ஊர்வலம்

## சம்பந்தப்பட்ட மந்திரிக்கு தகவல் கூறுமாறு கோரி

### அரச அதிபர் அறையில் அமர்ந்தனர்

— அலுவலகச் செய்தியாளர் ; கே. ஆர் —

யாழ்ப்பாணம், செப்டம்பர் 10

திங்கட்கிழமை மாலை யாழ் ஆஸ்பத்திரிமீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதை ஆட்சேபித்து அங்கு பணிபுரியும் டாக்டர்களும், ஏனைய ஊழியர்கள் சகலரும் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

ஆஸ்பத்திரி வார்ட்டுகளுக்கு இடையில் விழுந்த ஷெல்லின் அடிப் பாகத்தைக் கையில் ஏந்தியவண்ணம் வைத்திய அத்தியட்சகர் முன்னே செல்ல ஊர்வலம் சுட்டெரிக்கும் வெய்யிலிலும் யாழ் செயலகத்தை அடைந்தது.

ஆஸ்பத்திரிமீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதை ஆட்சேபித்தல்; ஆஸ்பத்திரிமீது தாக்குதல் இனிமேல் நடத்தப்படமாட்டாது என்ற தரப்பபோம் வாக்குறுதி எதையும் நம்பும் நிலையில் ஆஸ்பத்திரி ஊழியர்கள் இல்லை, எனவே கோட்டை இராணுவ முகாமை அகற்றவேண்டும். இவற்றைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அரசாங்க அதிபர் சமூகத்திலேயே எடுத்துச் சொல்வதே ஆஸ்பத்திரி ஊழியர்களின் ஊர்வலத்தின் நோக்கமாக இருந்தது.

ஆதலால் ஆஸ்பத்திரி ஊழியர்கள் அரச அதிபர் அமைச்சர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்வரை அவரது அறையில் சுற்றிவளைத்து அமர்ந்துகொண்டனர்;

எனினும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனோ, அதிகாரிகளுடனோ தொடர்புகொள்ள முடியாத நிலையில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுடன் மட்டுமே தொடர்பு கொள்ளக் கூடியதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

10—9—1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.33 முதல் 6.03 வரை
ராகுகாலம்:
12.03 முதல் 1.33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 2 சிங்களவர்கள் கடத்தப்பட்டனர்

### திருமலையில் சம்பவம்

திருகோணமலை, செப் 10

திருகோணமலை நகரை அடுத்துள்ள அபயபுரப் பகுதியில் சகோதரர்களான இரண்டு சிங்களவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளே இவர்களைக் கடத்திச் சென்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரான குணபால திருமலை தொலைத்தொடர்பு நிலையத்தில் ஊழியர். மற்றவரான குணதாஸ, குணபாலவின் தம்பி.

இரண்டு பேரும் அபயபுர பகுதியில் இருந்து அருகில் உள்ள தமிழ்ப் பகுதியான அன்பு வழிபுரம் சென்ற சமயமே இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அன்புவழிபுரம் பகுதியில் வாழும் தமிழர்கள் நேற்றுப் பயமுறுத்தப்பட்டனர் என்று முறையிடப்படுகின்றது. (உ-எ-150)

## மாகாணசபைகளின் அதிகார வலிமை இவ்வளவுதான்!

கொழும்பு, செப் 10

மாகாணசபைக்கு வழங்கப்படும் அதிகாரங்களை ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி வாபஸ் வாங்க முடியும்.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு சொன்னார்.

பண்டாரகமவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் சொன்னதாவது:-

ஜனாதிபதி ஜயவர்த்தனா எத்தனையோ இரவுகளை நித்திரையின்றிக் கழித்தே புதியயோசனைகளைத் தயாரித்தனர்.

மாகாணசபை முறை சமஷ்டி அரசமைப்பின் சாயல் கொண்டது அல்ல; மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளை தாங்களே தீர்மானித்து செய்யும் சுயாட்சி உரிமைகளையே அது வழங்குகின்றது.

இப்படி அமைச்சர் சொன்னார். (உ-எ)



## வாழைச்சேனையில் 'ஹெலி' மீது நேற்று போராளிகள் தாக்குதல்

மட்டக்களப்பு, செப் 10

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் நண்பகல் அளவில் ஹெலிக்கொப்டர் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் ஹெலிக்கொப்டருக்குச் சிறிது சேதம் ஏற்பட்டது.

போராளிகள் மீதான யுத்தப்படையினர் 'ஹெலி' தாக்குதலை மேற்கொண்ட போதுதான் போராளிகள் திருப்பித் தாக்கினர்.

அதன் பின்னர் ஹெலிக்கொப்டர் விமானத் தளத்துக்குத் திரும்பியது. (உ-எ-21)

# ஹெலியிலிருந்து $5\frac{1}{2}$ மணிநேரம் பருத்தித்துறையில் தாக்குதல்

## மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சம்

— பருத்தித்துறைச்செய்தியாளர்

பருத்தித்துறை, செப் 10

பருத்தித்துறையில் நேற்றுக்காலை 9-30 மணியிலிருந்து மாலை 3-00 மணிவரை இரண்டு ஹெலிக்கொப்டர்கள் பல தடவைகள் மாறி மாறித் தாக்குதல்கள் நடத்தின.

நேற்றுக் காலை 7-00 மணியளவில் சுப்பர் மடப்பகுதியால் இராணுவ சிப்பாய்கள் வெளியேற முயன்ற போது போராளிகள் கைக்குண்டுகளை வீசினார்கள். அதனையடுத்து இராணுவத்தினர் முகாமிற்குள் சென்றனர். அங்கிருந்து இருமுறை ஷெல் தாக்குதல் நடத்தினார்கள்.

நேற்றுக்காலை 10-00 மணியளவில் பருத்தித்துறை செம்பியன்பற்று வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட மினிபஸ் ஒன்றை ஹெலிக்கொப்டர் கண்டது. மினிபஸ்ஸில் இருந்த பெண்களும் குழந்தைகளும் அவலக் குரல் எழுப்பினார்கள். ஹெலிக்கொப்டர் மிகவும் தாழ்வாகப் பறந்து நோட்டம் விட்டதை அடுத்து ஒன்றும் செய்யாது திரும்பியது.

பருத்தித்துறை நாரப் பகுதியில் நடத்தப்பட்ட ஹெலித் தாக்குதலில் போராளி ஒருவர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமுற்றன.

இதேவேளை திங்கள் இரவு நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் கார்ச் சாரதியான ஆர். சேதலிங்கம் (வயது 32) காயமடைந்தார்.

பருத்தித்துறைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் சுமார் ஐந்தரை மணிநேரம் இவ்வாறு தாக்குதல்களை நடத்தியது இதுவே முதல் தடவை இப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரிமீது திங்கட்கிழமை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலை ஆட்சேபித்து நேற்று நடத்திய ஊர்வலத்தில் வைத்திய அத்தியட்சகர் திரு சு. நச்சினார்க்கினியர் ஷெல் குண்டின் பாகத்தை ஏந்திய வண்ணம் முன்னே செல்ல, வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் தொடர்ந்து செல்வதை முதலாவது படத்தில் காணலாம்.

ஷெல் குண்டின் பாகத்தை வைத்திய அத்தியட்சகர் யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் இரண்டாவது படத்தில் காண்பிக்கிறார்.

## யாழ் நகரில் நேற்று அமைதி

யாழ்ப்பாணம், செப் 10

யாழ்ப்பாணம் நேற்று வழமைக்குத் திரும்பியது. ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் நேற்று நகருக்கு வந்து சென்றனர்.

செய்தி அச்சுக்குப் போகும் வரை குறிப்பிடத்தக்க அளவு ஷெல் தாக்குதல் எதுவும் இடம் பெறவில்லை. (இ-10)

## மட்டக்களப்பில் அரச கட்டடங்கள் பாலங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு அரச கட்டடங்கள், பாலங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

படுவான்கரையில் உள்ள கொக்கட்டிச் சோலைப் பகுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபையின் மூன்று களஞ்சியங்கள், கமத் தொழிற் சேவை நிலையத்துக்குச் சொந்தமான இரண்டு கட்டடங்கள் ஆகியவை திங்கள் நள்ளிரவு 12.30 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

ஆயித்தமலை — உன்னிச்சை வீதியில் உள்ள சிவப்புப் பாலம் திங்கள் இரவு 9 30 மணியளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. (உ-எ-21)

## மண்மூடைகள் அகற்றப்பட்டாலேயே லொறி பாஸ் கிடைக்குமாம்

யாழ்ப்பாணம், செப் 10

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் குருநகர் கோட்டைக்குச் சமீபமாக அமைக்கப்பட்டிருக்கும் மண்மூடைகள் அகற்றப்பட்டால் மட்டுமே கொழும்பு செல்லும் லொறிகளுக்கு பாஸ்கள் வழங்கப்படுமாம்.

நேற்று பாஸ்கள் பெறுவதற்காக கோட்டைக்குச் சென்ற லொறிச் சொந்தக்காரர்களிடம் இராணுவ உயர் அதிகாரிகள் இப்படித் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக வடபிராந்திய லொறிப் போக்குவரத்து ஒன்றியம் யாழ். அரச அதிபரிடம் முறையிட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக கொழும்புக்கான லொறிச் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## புலிகள் நடத்திய 'கனன் சார்ஜ்' தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 10

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியே புறப்பட்ட சிப்பாய்களை நோக்கி விடுதலைப் புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல் நடத்தினர்கள்.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் பலர் உயிரிழந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

காயமடைந்த படையினரை ஹெலிக்கொப்டர்கள் ஏற்றிச் சென்றதாகவும்—

தமது தாக்குதலின் நிலை கொள்ள முடியாத இராணுவத்தினர் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றதாகவும் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# தவறான முறையில் ராஜீவ் வழி நடத்தப்பட்டுள்ளார்

### ஹராரே சம்பவம் குறித்து பிரேமா

கொழும்பு, செப். 10

அக்கறை கொண்ட சிலரால் ராஜீவ் காந்தி தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறார்.

— இப்படித் தெரிவித்தார் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச.

தமது ஹராரே விஜயம் அங்கு தாம் இந்தியப் பிரதமருடன் பேசியது ஹராரேயில் இந்தியப் பிரதமர் செய்தியாளர்களிடம் இலங்கைபற்றிச் சொன்ன விடயங்கள் ஆகியன குறித்து 4 பக்க அறிக்கை ஒன்றைப் பிரதமர் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஹராரேயில் வைத்து இந்தியப்பிரதமரிடம் கையளித்த கடிதம் இரகசியமானது அல்ல. அக்கறைகொண்ட சிலரால் திரு ராஜீவ் காந்தி தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தானில் வைத்து இந்தியப் பயணிகளுடன் அமெரிக்க விமானம் ஒன்று கடத்தப்பட்ட சம்பவத்தின் காரணமாகத்தான் அவர் செய்தியாளர் மாநாட்டில் சூடா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த போராளிகளுக்கு நகரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 10

திங்களன்று யாழ் நகரில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலில் பலியான மூன்று விடுதலைப் புலிகளுக்கு நேற்று யாழ் நகரில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நகரில் வாழை மரங்களும், தென்னோலைகளும் கறுப்புத் துணிகளும் கட்டப்பட்டிருந்தன.

திங்கட்கிழமை இருவர் மரணம் அடைந்தனர். காயம் அடைந்திருந்த மற்றும் ஒருவர் நேற்று மரணமானார். (இ-10)

## உண்ணாவிரதம்

### பூஸா, வெலிக்கடையில் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, செப் 10

பூஸா முகாம், வெலிக்கடைச் சிறை ஆகியவற்றில் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று அறிவப்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



சபாஷ் டாக்டர்களே, உங்களுக்கு இருக்கும் மனத்துணிவு எல்லாத் தமிழ் அரசாங்க அதிகாரிகளுக்கும் வரவேணும் ..!

### சிப்பாய்களுக்கு சொறி, சிரங்கு

கொழும்பு, செப். 10

யாழ் கோட்டை முகாமில் உள்ள சிப்பாய்கள் பெரும்பாலோர் சொறி சிரங்கினால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுகிறார்களாம்.

அவர்களை மாற்றி வேறு சிப்பாய்களை அனுப்ப பாதுகாப்பு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று அறியப்படுகிறது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## விளையாட்டரங்கு

### இருஸ்கொப்பர்ஸ் முஸ்லிம் நண்பர்கள் கழகங்கள் இணைச்சாம்பியன்கள்

கன்னாகம் செப். 10

கந்தரோடை சீக்கோ டிக்கோ விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய 88 கழகங்கள் பங்கு கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ். முஸ்லிம் நண்பர்கள் சழகமும் இருஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைச் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன.

ரசிகர்களின் ஆரவாரத்துடன் சம்பியன் தெரிவு போட்டியில் யாழ் முஸ்லிம் நண்பர்கள் கழகமும் தெல்லிப்பழை இருஸ்கொப்பர்ஸ் சழகமும் மோதிக் கொண்டனர்.

போட்டி ஆரம்பமாகி 13 ஆவது நிமிடத்தில் முஸ்லிம் நண்பர்கள் முதலாவது கோலைப் போட்டார்கள்.

அதைத் தொடர்ந்து 4 ஆவது நிமிடத்தில் இருஸ்கொப்பர்ஸ் தமது முதலாவது கோலைப் போட்டு சமநிலைக்கு வந்தனர்.

இடைவேளையின் பின் வீர் ஆட்டம் விறுவிறுப்படைந்தது.

முஸ்லிம் நண்பர்கள் கழகம் தமது இரண்டாவது கோலைப் போட்டதும் போட்டி சூடுபிடித்தது.

போட்டி முடிவடைய சில நிமிடங்கள் இருக்கையில் இருஸ்கொப்பர்ஸ் தனது இரண்டாவது கோலைப் போட்டதால் 2-2 என போட்டியின் முடிவு அமைந்தது.

மேலும் ஐந்து நிமிடங்கள் வழங்கப்பட்டு போட்டி தொடர்ந்த போதிலும் எக்கோஷ்டியும் கோல்போட முடியாது போகவே இரு பகுதிக்கும் நான்கு நான்கு 'பனல்டி' கொடுப்பதற்கு எத்தனிக்கப்பட்ட போது ரசிகர்கள் மைதானத்திற்குள் சென்று விளையாட்டை குழப்பி விட்டனர்.

எனவே இரு சழகங்களும் இணைச் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன. (இ-27)

## உரவிலை அதிகரிப்பு

### தட்டுப்பாடும் நிலவுகிறது விவசாயிகள் பாதிப்பு

பலாலி, செப் 10

யாழ் குடாநாட்டுக்கு கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் உரவகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

சில உரவகைகளுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது. இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிருமி நாசினித் தட்டுப்பாடு, சந்தைப்படுத்த முடியாமை போன்ற பாதக நிலைமைகளால் குடாநாட்டு விவசாயிகள் பலர் உப உணவுச் செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

உரவகைகளுக்கு நிரந்தர விலை குறிப்பது சம்பந்தமாக உர விற்பனையாளர்களை யாழ் சுசேரிக்கு அழைத்து மேலதிக யாழ். அரசாங்க அதிபர் கருத்துக் கேட்டார்.

பாதுகாப்புக் காரணத்தினால் போக்குவரத்துச் சேவையாளர்கள் தமது கூலியை அதிகரிப்பதே உரவகைகளின் விலை ஏற்றத்திற்கு காரணமென அப்போது தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் உரவகைகளை இறக்கித்தரின் நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியுமென வியாபாரிகள் கருத்துத் தெரிவித்ததாகத் தெரிகின்றது. (இ-119)

யாழ் மாவட்டத்தில்

## கடந்த ஒரு வருடமாக தொழில் வங்கி படிவங்கள் புதுப்பிக்கப்படவில்லை!

யாழ்ப்பாணம் செப் 10

யாழ்ப்பாணம் அரச செயலகம் ஓராண்டுக்கு மேலாக யாழ் மாவட்டத் தொழில் வங்கிப் படிவங்களைப் புதுப்பிக்கவில்லை.

இதனால் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து இருக்கும், படித்த படிக்காத, தொழில் பயிற்சி பெற்ற, பெருந்தொகை எண்ணிக்கையான யுவர்களும், யுவதிகளும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் அரச அலுவலகங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் பெற விரும்புவோர் தொழில் வங்கியில் தம்மைப் பதிவு செய்ய வேண்டும்.

இங்கு ஏற்படும் வெற்றிடங்களுக்கு அவ்வாறு பதிவு செய்தவர்களையே தெரிவு செய்தல் வேண்டும். இதுவே இன்றைய நடைமுறை ஆகும்.

1985ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்தான் கடைசியாக தொழில் வங்கியில் பெயர்களைப் பதியும் அலுவல்கள் யாழ் அரச செயலகத்தில் நடைபெற்றன.

இதன் பின்னர் இதுவரை இவை புதுப்பிக்கப்படவில்லை. இதனால் மூன்று வகையினர் பாதிப்பு அடைந்துள்ளார்கள்.

* 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் பெறுபேறுகளைப் பெற்றவர்கள்.

* 1984, 85ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற ஜி. சி. (உயர்தர) பரீட்சை முடிவுகளில் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிபெறத் தவறியவர்கள்.

* 1984, 85ஆம் ஆண்டு ஜூலை மாதங்களில் தொழில் நுட்பக் கல்லூரியில் பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்று பயிற்சியை முடித்துக் கொண்டவர்கள்.

இந்த மூன்று வகையினர் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

தொழில் வங்கிப் படிவங்களை ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் புதுப்பிப்பது மூலம் இத்தகைய பாதிப்புகளை யாழ் செயலகம் தவிர்த்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

### பயிற்சி சான்றிதழ்

மட்டக்களப்பு, செப்.10

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் 1982-ஆம், 1983-ஆம் ஆண்டுகளில் இருவருடங்களை பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களின் பயிற்சிச் சான்றிதழ் 1 – 1 – 1985 தொடக்கம் செல்லுபடியாகுமென காலாசாலை முதல்வர் செல்வி. எஸ் சின்னப்பு அறிவித்துள்ளார்.

இச்சான்றிதழ் 1 - 2 - 1985 தொடக்கம் செல்லுபடியாகுமென முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-81)

### களவுப் பொருளுடன் வாகனத்தில் பவனி

அச்சுவேலி, செப். 10

ஆடம்பரப் பொருள்கள், உணவுப் பொருள்கள் உயர்ந்த இன நாய்க்குட்டி உட்பட பல பொருள்களை வீடுகளில் களவெடுத்த இருவர் சம்பந்தப்பட்ட பொருள்களுடன் ஏற்றப்பட்டு வாகனத்தின் மேல் வீதிவழியே கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த வாகனம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் சில மணி நேரம் தரித்து நின்றது.

இளைஞர் அமைப்பு ஒன்றினால் வாகனத்தின் மேல் ஏற்றிச் செல்லப்பட்ட இந்த இளைஞர்களின் கழுத்துகளில் தொங்கவிடப்பட்ட கார்ட்டுகளில் இவர்களது குற்றச் செயல்களின் விபரம் எழுதப்பட்டிருந்தது. (இ-11)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### செய்திக்கொத்து

#### கற்கோவளத்தில் மக்கள் கடை

பருத்தித்துறை, செப் 10

கற்கோவளம் குடியேற்றத் திட்டத்தில் ஒரு புதிய மக்கள் கடை அமைக்கப்படுகிறது.

இதற்கான காணியை கற்கோவளம் பகுதி மீனவர்கள் அன்பளிப்புச் செய்திருந்தனர். (இ-118)

#### இலவச தையல் பயிற்சி நிலையம்

சாவகச்சேரி, செப். 10

சாவகச்சேரி லயன்ஸ் சழகம் ஏற்பாடு செய்து உள்ள இலவச தையற் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் சழகத் தலைவர் திரு பே. பிலிப் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் லயன்ஸ் கழக வலயத் தலைவர் டாக்டர் திரு ரி சோமசுந்தரம் மங்கள தீபம் ஏற்றி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

உதவி அரசாங்க அதிபர் திரு கே. துரைராசா, நகராட்சி மன்ற ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

#### தொட்டிலடி வீதி திருத்தப்படும்

பண்டத்தரிப்பு, செப்.10

குண்டும் குழியுமாக உள்ள பண்டத்தரிப்பு தொட்டிலடி பிரதான வீதியை சிரமதானம் மூலம் செப்பனிட இளவாலை யாழ்ப்பாணம் மினிபஸ் உரிமையாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கின்றது.


எதிர்வரும் போயா தினம் 17 ஆம் திகதி புதன்கிழமை சிரமதானப் பணி தொடங்க வுள்ளதாக சங்கச் செயலாளர் திரு. சந்தையா அரசக்கோன் தெரிவித்தார். (இ-180)

### வெளிநாடு பயணம்

யாழ்ப்பாணம், செப் 10

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு த. அருணகிரிராசா சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசிலை ஏற்று வெளிநாடு சென்றிருக்கிறார்.

இஸ்ரவேல், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, டென்மார்க், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச்சென்று தொழிற் சங்ககூட்டுறவு அமைப்புக்கள், பற்றியும் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் எவ்வாறு இணைந்து தொழிற்படுகின்றன என் பதுபற்றியும் இவர் ஆராய்கிறார்.



நான்கு மாதகாலம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள திரு. அருணகிரிராசா 1987 ஜனவரியில் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வளவெட்டித்துறை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் இவர், கடந்த ஐந்து வருடங்களாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாக செயலாளராக சேவையாற்றி வருகிறார். (இ-எ-5)

### அரசாங்க மருந்து கலவையாளருக்கு சம்பள உயர்வு

யாழ்ப்பாணம், செப். 10

அரசாங்க மருந்துக் கலவையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும் புதிய சுற்று நிருபம் ஒன்றை கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகம் சகல பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த சம்பள உயர்வு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மருந்துக் கலவையாளர்களது சேவையை மத்திய தர தொழில் நுட்ப ஊழியர் தரத்திற்கு உயர்த்துவது என்றும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்கம் இது தொடர்பாக சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி அளித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. வி பி விமலசிங்கா யாழ்மாவட்ட கிளையின் செயலாளர் திரு என். எம். சந்தசாமிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

### நெல்லியடியில் கல்வி அலுவலகம்

வட மராட்சிப் பகுதிக்கான கல்வி அலுவலகம் ஒன்று விரைவில் நெல்லியடியில் திறக்கப்படும்.

இதன்மூலம் யாழ்ப்பாண கல்வி அலுவலகத்தின் வேலைப்பளு குறைக்கப்படும்.

அதன் கடமைகளும் பரவலாக்கப்படும்.

இதன்மூலம் வடமராட்சிப் பகுதியில் உள்ள ஆசிரியர்கள் எதிர்காலத்தில் தங்கள் அலுவல்களை கவனிப்பதற்காக யாழ்ப்பாணக் கல்வி அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிராது (இ-70)

### பல் நோயாளர் பாதிப்பு

ஊர்காவற்றுறை, செப் 10

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் பல் வைத்தியர் இல்லாததால் தீவுப்பகுதி நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### துர்க்கை அருளால் சுபீட்சம் நிறைந்த வாழ்வு இடைக்க பிரார்த்திப்போம்

தங்கம்மா அப்பாக்குட்டி உரை

சுன்னாகம், செப் 10

துர்க்கையின் அருளால் எமது மக்கள் எல்லா நன்மையும் — மகிழ்ச்சியும் அமைதியும், சுபீட்சம் நிறைந்த வாழ்வு பெறவும் பிரார்த்திப் போம்

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வருடாந்த மகோற்சவ ஆரம்பதின கொடி ஏற்ற விழாவில் அவர் உரையாற்றினார்.

பெரும் எண்ணிக்கையான பெண்களும் ஆண்களும் சிறுவர் சிறுமிகளும் ஆசார சீலர்களாக கொடியேற்ற விழாவில் கலந்து கொண்டனர்.

பிரமாண்டமான அன்னதான வைபவம் தீர்த்தத் திருவிழா வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார, தண்ணீர் பாதுகாப்பு வசதிகளை பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையிலான பரிபாலன சபை ஒழுங்கு செய்துள்ளது (இ-27)

### கஷ்டபிரதேச விசேஷ படி

தாளையடி, செப் 10

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச விசேஷ படிகள் வழங்கப்பட்டுள்ளன.

மணற்காடு தொடக்கம் ஆழியவளை வரை உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு, அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் பத்துச்சதவீதமும், வெற்றிலைக்கேணியிலிருந்து போக்கறுப்பு வரையுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் [illegible] சதவீதமும் விசேஷபடியாக வழங்கப்பட்டு வருகின்றன. (இ-114)


★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ லண்டன்
★ கனடா

நம்பிக்கை வாய்ந்த பயணம்

உடனடியாக

தாமதமின்றித் தொடர்பு கொள்க.

யாழ். - கொழும்பு
விமான சேவை
பலாலிக்கு விசேட போக்குவரத்து வசதிகளுடன்
ஒழுங்காக நடைபெறுகிறது.
உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்க

எங்கள் சேவைகள்:

- எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
- துரிதமான பாஸ்போர்ட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
- CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
- இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன் - ரெலெக்ஸ்
முதல் தரமான சேவை
Open 24 Hours

dyn ads

Mack Communications & Travels
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836



இன்று ஆரம்பம்!

87 A/L DAYCLASS

(எமது திறமையான ஆசிரியர்களினால்)

விபரங்கட்கு:-

New Master Institute

B.M C Lane, JAFFNA



அறிவித்தல்

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனையாளர் முகவர் சங்கம்

பொதுக்கூட்டம்

காலம்: 11-9-86 (வியாழக்கிழமை) காலை 10 மணி

இடம்: OLD PARK CHINESE RESTAURANT
207, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

மேற்படி கூட்டத்தில் எரிபொருள் கொள்முதல், எரிபொருள் விற்பனை, விலைக் கட்டுப்பாடு என்பன பற்றி தங்கள் ஒவ்வொருவரது அபிப்பிராயங்களின் அடிப்படையில் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகவர்கள் யாவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகவர் சங்கம்.



ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அழைப்பிசைகளின் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன் ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உன்னுடைய மனத்தை எந்தக் கணத்தில் இறைவன் பக்கம் திருப்புகின்றாயோ, அப்பொழுதே நீ அளவற்ற பலத்தையும் அமைதியையும் அடைவாய்

- சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 10-09-86 த.பெ.23

## அப்பாவிகளைத் தாக்க அரசுக்கு உரிமை இல்லை

யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள இராணுவ முகாமையும், குடிசனம் செறிந்துள்ள பகுதிகளில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களையும் அகற்ற வேண்டும்.

அதன் அவசியத்தையும், அவசரத்தையும் வலியுறுத்தி இப்பத்தியில் பல தடவைகள் எழுதப்பட்டாயிற்று.

எனினும் அது குறித்து இப்போது மீண்டும் எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் யாழ்ப்பாண நகரில் ஷெல் மழை பொழிந்தது. நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கும் அதிகமாக சிறிது சிறிது நேர இடைவெளிகளுடன் யாழ் கோட்டையிலிருந்து 'மோட்டோ' "ஆட்டிலறி" இயந்திரங்கள் 'ஷெல்' குண்டுகளைக் கக்கிய வண்ணம் இருந்தன.

போராளிகளும் பதிலுக்கு 'ஷெல்' தாக்குதல்களை நடத்தினர்கள் என்பது உண்மைதான்.

ஆனால் ஆத்திரமூட்டப்படாத வேளைகளிலும் கூட கோட்டை முகாமிலிருந்து ஷெல் குண்டுகள் நகரின் பல பக்கங்களுக்கும் ஏவப்பட்டன.

யாழ்ப்பாண நகரம் —

குடிசனம் செறிந்த பகுதி வர்த்தக நிலையங்கள் அடர்ந்த பகுதி. பழம் பெரும் கல்வி நிலையங்கள், சர்வமத ஆலயங்கள் நிரம்பிய பகுதி.

மாகாணம் முழுவதற்கும் பொதுவான பெரிய ஆஸ்பத்திரி உள்ள இடமும் யாழ். நகரப் பகுதிதான்.

இம்முறை கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்குள் விழுந்திருக்கிறது. ஏற்கனவே பல தடவைகள் 'ஷெல்' வீச்சினல் ஆஸ்பத்திரி பாதிக்கப்பட்டது உண்டு ஆனல் இம்முறை பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. தெய்வாதீனமாக நோயாளர் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

ஆனல் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் நோயாளர் பலருக்கு அதிர்ச்சி வியாதிகள் தோன்றும் என்பதில் ஐயமில்லை

கடந்த இரண்டு நாட்களாக ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் விழுந்த ஷெல் குண்டுகளின் சத்தமே பலருக்கு இருதய வியாதிகளைக் கொண்டு வந்திருக்கும். மேலும் பலருக்கு மன ஏக்கத்தினலும், பயப்பிராந்தியினலும் ஏற்கனவே இருந்த வியாதிகள் முற்றியிருக்கும்.

இது—

நோயைக் குணப்படுத்தி, மரணத்தில் இருந்து ஒதுங்கி நிற்க முயன்றவர்களுக்கு, நோய்களை அதிகரித்து மரணத்துக்கு அருகில் அழைத்துச் சென்றதாக முடிகிறது.

ஏனைய இடங்களைத் தவிர்த்துப் பார்த்தாலும் கூட, ஆஸ்பத்திரிக்காகவேனும், கோட்டை இராணுவ முகாமை அகற்ற வேண்டும். இதனை நியாய புத்தி உள்ள எவரும் ஒப்புக்கொள்வர்

போராளிகள் தாக்குகிறர்கள் அதனல் நாமும் தாக்கவேண்டி ஏற்படுகிறது என்று பாதுகாப்புப் படையினரும், அரசாங்கமும் நொண்டிச் சமாதானமோ, காரணமோ கூறி கோட்டையில் நிலை கொண்டிருப்பதை நியாயப்படுத்த முடியாது.

மக்களை அவர்களின் இடங்களில் இருந்து குடி பெயர்வித்து, இராணுவ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முடியாது. அரசும் பாதுகாப்புப் படைகளும் மக்களைப் பாதுகாப்பதற்காகவே; அவர்களை அழிப்பதற்காக அல்ல.

இதனைக் கவனத்திற் கொள்ளாமல் மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவ முகாம்களை வைத்திருத்தல் கண்டிக்கப்பட வேண்டியது.

யுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்தாமல் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் உரிமையோ அதிகாரமோ அரசுக்குக் கிடையாது

மக்கள் அடர்ந்து வாழும் பகுதிகளில், நகரங்களில் படை முகாம்களை அமைத்து மக்களைத் தாக்குவது பிரகடனப்படுத்தாமல் மக்களுக்கு எதிராக யுத்தம் புரிவதாக அமையும்.

எனவே தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தவில்லை என்பது உண்மையானல் அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள படைமுகாம்களை உடனே அகற்ற வேண்டும்.

சமாதானப் பேச்சு என்று சொல்லப்படுகிறது.

போர் என்றல் முடிவில்லாதது பிரச்சினையைத் தீர்க்க அது உதவாது உலக நாடுகள் அதனை விரும்பமாட்டா. இவ்வாறு எல்லாம் ஜனதிபதி கூட்டங்களில் பேசி வருகிறர்.

அப்படிப் பேசுவதால் நடக்கப் போவது எதுவுமில்லை. தமது சமாதான விருப்பத்தை அவர் செயல் மூலம் காட்டவேண்டும்

அதன் முதற்படியாக தமிழ்ப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றலாம். அதன் மூலம் தமிழ் மக்களின் அபிமானத்தை மட்டுமல்ல, முகாம்களில் அடைபட்டுக் கிடந்து கஷ்டப்படும் படையினரது அபிமானத்தையும் பெறலாம்.

படை முகாம்களில் இருந்து படும் கஷ்டங்களை தப்பியோடிய இரண்டு சிப்பாய்கள் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

சமாதானம் என்று கூறிக்கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதால் இரண்டு பக்கத்தாலும் பல உயிர்கள் அழிந்து போகின்றன

அதனைத் தடுத்து சமாதான நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு அரசாங்கத்துக்கு இது ஓர் நல்ல சந்தர்ப்பம்.

# ரஷ்ய — சீன உறவு விருத்தியில் ஆர்வம்

## கோபர்ச்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, செப் 9

சோவியத் யூனியன் சகல துறைகளிலும் சீனவுடன் உறவுகளை விருத்தி செய்து கொள்ள விரும்புகிறது.

ரஷ்ய ஜனதிபதி மிகெயில் கோபர்ச்சேவ் இதனை அறிவித்தார்.

கடந்த இருபது ஆண்டு காலமாக சீன-ரஷ்ய உறவுகள் சுமுகமாக இருக்கவில்லை.

ஆனல் தற்பொழுது சகல துறைகளிலும் உறவை வளர்த்துக் கொள்ள ரஷ்யா மனப்பூர்வமாக ஆயத்தமாக உள்ளது.

பொருளாதாரத்துறையில் ஏற்கனவே உறவுகள் விருத்தியடையத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு தெரிவித்த மிகெயில் கோபர்ச்சேவ் ரஷ்ய தலைப் பிரதமர் நிக்காலே ய் ஸ்டாலின் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்று இந்த முயற்சிக்காக சீன புறப்படும் எனவும் தெரிவித்தார்.

ஒரு வாரகாலம் அவர்கள் சீனவில் தங்கியிருந்து பல தலைவர்களுடன் உரையாடுவார்கள் எனவும் கோபர்ச்சேவ் மேலும் கூறினர். (ஒ)

### சர்வதேச எழுத்தறிவு தினம்

வாஷிங்டன், செப். 9

சர்வதேச எழுத்தறிவு நாள் இன்று கொண்டாடப்படுகின்றது

உலகில் ஒவ்வொரு 5 பேரிலும் ஒருவர் எழுதப் படிக்கத் தெரியாமல் இருப்பதாக 'யூனெஸ்கோ' தெரிவித்தது

இந்த நூற்றுண்டு முடிவுக்குள் தகுந்த கட்டுப்பாட்டு நடவடிக்கை எதுவும் இல்லாதுவிடின் எழுத்தறிவற்றவர்கள் தொகை 90 கோடியாக உயரக்கூடும் எனவும் அது தெரிவித்தது.

ஆண்களைவிட பெண்தான் அதிக அளவில் இருப்பதாகவும், எழுத்தறிவில்லாமல் இருப்பதால் ஏற்படக் கூடிய நிலையை மக்கள் உணரும்படி செய்வதுதான் உலக எழுத்தறிவு தினத்தின் நோக்கமாகும். (ஒ)

## ஆபிரிக்க நாடுகளுக்கு உதவக் கோரிக்கை

அபிட் ஜான் செப்.9

ஆபிரிக்க நாடுகளுக்கு உலக நாடுகள் இயந்திர உபகரணங்கள், உரம் போன்றவற்றை கொடுத்து உதவவேண்டும்.

இவ்வாறு ஐவரிகோஸ்டில் நடந்த உணவு விவசாய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

50 ஆபிரிக்க நாடுகள் இதில் கலந்துகொண்டன

ஆபிரிக்க நாடுகள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இருந்த போதிலும் அவற்றிற்கான இயந்திரங்களும் கருவிகளும் உலக நாடுகள் மூலமே பெறப்படவேண்டும்

தென் ஆபிரிக்க மீது பொருளாதாரத்தடைகள் கட்டாயப்படுத்தப்படும் பட்சத்தில் ஏனைய ஆபிரிக்க நாடுகள் உணவு பற்றாக்குறையில் சிக்காமல் இருக்க இதுவழி வகுக்கும். (ஒ)

## பெனுஸிர் பூட்டோ விடுதலையானர்

கராச்சி, செப் 9

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனுஸிர் பூட்டோ நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்

அரசியல் கட்சிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை மீறி நடந்து கொண்டதாக கடந்த மாதம் கைது செய்யப்பட்ட சகல அரசியல் தலைவர்களுக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலையாகினர்

சுகாதார வசதிகளற்ற அசுத்தமான சூழ்நிலையில் தனிமையாக தம்மைச் சிறை வைத்திருந்ததாக பெனுஸிர் பூட்டோ குற்றம் சாட்டினர்

பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது என்ற தம்முடைய முடிவை தொடர்ந்தும் செயல்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்னும் 18 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்துவது பற்றி பாகிஸ்தான் அரசு அறிவிக்க வேண்டும் என்றும் தவறினல் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் பெனுஸிர் பூட்டோ கூறினர். (ஒ)

### சீன ஜனதிபதி கலந்து கொண்ட வைபவம்

பீசிங், செப் 9

சீனவின் ஜனதிபதி லீசியாநியான் கடந்த மே மாதத்திற்குப் பின்பு முதற் தடவையாக பொதுவைபவம் ஒன்றில் கலந்து கொண்டார்.

இளவரசர் சிஹனுக் தலைமையிலான கம்பூச்சியாவின் கெரில்லா கூட்டணியினரை அவர் சந்தித்தார்.

81 வயதான சீன ஜனதிபதி சுகயீனம் காரணமாக கடந்த சில மாதங்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தார். (ஒ)

### அலஜீரியாவில் ரயில் விபத்து

அல்ஜீரியாவில் சரக்கு ரயில் வண்டியும் பயணிகள் ரயில் வண்டியும் மோதியதால் 80 பேர் பலியானர்கள் பலர் காயமடைந்தனர்,

### பிரான்ஸிற்கு பாராட்டு

பிரிவினைவாத பயங்கரவாதத்திற்கு எதிராக பிரான்ஸ் கடும் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து இருப்பதை ஸ்பெயின் பாராட்டியுள்ளது. (ஒ)

## வெளி உலகில்

### றேகன் எச்சரிக்கை

ரஷ்யாவில் உளவு பார்த்த குற்றங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க செய்தியாளரை வெளியேற்றுவிடின் இரு நாடுகளுக்கான உறவுகள் மேலும் விரிசலடையும் எனக் கூறினர் அமெரிக்க ஜனதிபதி.

### தமிழ்நாட்டில் எண்ணெய் ஆய்வு

தமிழ் நாட்டில் ரஷ்யா நிபுணர்களின் ஆதரவுடன் காவிரி ஆற்றுப்பகுதியில் எண்ணெய் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

### கடத்தல் முறியடிப்பு

தூத்துக்குடியில் இந்திய சுங்க இலாகாவினர் 975 கிலோ வெள்ளிக்கட்டிகளைக் கைப்பற்றினர். இவை சுமார் 45 லட்சம் இந்திய ரூபா பெறுமதியானவை.

### பெரோஸ் காந்தி நினைவு தினம்

இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ்காந்தி மறைந்த 26 ஆவது தினம் நேற்று டில்லியில் அனுஷ்டிக்கப்பட்டது.

### ரூமேனிய ராணுவ பலம் குறைப்பு

ரூமேனியாவின் ஆயுதபலத்தையும் மட்டுப்படுத்துவது என்ற ஜனதிபதி சொசெஸ்கியூவின் யோசனை குறித்து மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

### புதிய செய்மதி

ரஷ்யாவிலிருந்து மொலியா —1 என்ற ஒரு புதிய செய்மதிக் கிரகத்தை விண்வெளிக்கு அனுப்பி வைத்துள்ளது புதிய விண்வெளி சாதனங்களை வடிவமைப்பதற்கு இது பயன்படும்.

# கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த 5,260 குடும்பங்களுக்கு நிவாரணம்

கிளிநொச்சி, செப். 10

கடந்த ஜூன் மாதம் முதல் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினல் பாதிக்கப்பட்டு அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களில் சுமார் 5260 குடும்பங்களுக்கு அகதிகள் நிவாரணம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் கிளிநொச்சி அகதிகளுக்கென வழங்கப்படும் இந்த உதவித் திட்டத்தின் கீழ் சுமார் 1460 குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கு வெளியே வைத்து உணவுப் பொருட்கள் பெறுவதற்கான உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மிகுதி சுமார் 4 800 குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்து உணவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு அகதிகளுக்கான உணவுப் பத்திரம் பெற்றவர்களில் 175 குடும்பங்கள் மட்டும் பரந்தன் கிராம சேவகர் பகுதியைச் சேர்ந்தவை.

ஏனைய 5085 குடும்பங்களும் திருநகர், ஜெயந்திநகர், கணேசபுரம், கனகபுரம், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி, இரத்தினபுரம், திருவையாறு, நான்காம் வாய்க்கால், அம்பாள் நகர், உதயநகர், ஆனந்தபுரம், தொண்டமான் நகர், பொன்நகர், பாரதிபுரம், கனகாம்பிகைக் குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவை.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுக்கான அகதிகளுக்கான உணவுப் பத்திரம் கிளிநொச்சி விசேஷ சேவைகள் உத்தியோகத்தர் எஸ் தர்மபாலனல் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகங்களின் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

உணவுப் பத்திரங்கள் பெற்றவர்கள் சகலரும் ப.நோ.கூ. சங்க கிளைகளின் மூலம் தமது உணவுப் பொருள்களைப் பெறுகின்றனர்

தமது வீடுகளை விட்டு வெளியேறிய தனிநபர் ஒருவருக்கு தலா 55 ரூபாவும், இருவருக்கு 85 ரூபாவும், மூவருக்கு 105 ரூபாவும், நால்வருக்கு 125 ரூபாவும், ஐவருக்கு 155 ரூபாவும், ஆறுபேருக்கு 170 ரூபாவும் ஏழு பேருக்கு 185 ரூபாவும் எட்டு பேரும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் சுமார் 200 ரூபாவும் (உத்தரவுப்பத்திரம்) வழங்கப்பட்டது (இ 76)

## மட்டக்களப்பு காணி சுவீகரிப்பு

## 10 மாதங்களாகியும் நஷ்டஈடு இல்லை

### தளபதிக்கு ஆயர் மகஜர்

மட்டக்களப்பு, செப் 10

மட்டக்களப்பு விமான நிலையச் சுற்றுடல் காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு பத்து மாதங்களாகியும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு — திருமலை ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அண்மையில் கொழும்பில் கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்காவைச் சந்தித்து உரையாடிய போது பிரஸ்தாபித்தார்.

குடியிருப்பாளருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கும் அறிக்கை ஒன்றைக் கையளித்து தாமதமின்றி நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என ஆயர் வலியுறுத்தினர்.

இவ்விடயம் தொடர்பாக இதுவரை எவரும் தனது கவனத்துக்கு கொண்டுவரவில்லை எனவும் விரைவில் நஷ்டஈடு வழங்க ஆவன செய்யப்படுமெனவும் தளபதி தெரிவித்தார். (இ-21)

## வடக்கு - கிழக்கில் பரீட்சை நிலையம் இல்லை

அச்சுவேலி, செப்.10

கைத்தொழில் திணைக்களத்தினல் நடத்தப்பட்ட "இடைமட்ட தொழில் நுட்ப சேவைகளுக்கான பயிலுநர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை" வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறவில்லை.

இப்பரீட்சை இம்மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பரீட்சை நிலையங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த வெளி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு அங்கு வந்து பரீட்சை எழுதுமாறு வடக்கு கிழக்கு பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியான யாழ் மாவட்ட பரீட்சார்த்திகள் பலர் தற்போதைய நிலையில் வெளிமாவட்டங்களுக்குச் சென்று பரீட்சை எழுதுவதில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை உணர்ந்து பரீட்சை எழுதச் செல்லவில்லை (இ-11)

### கலால் திணைக்கள பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப். 10

திருவாளர்கள் ஏ. செல்வராசா, வி. சிவலிங்கம், எஸ். சோமசுந்தரம் ஆகியோர் கலால் திணைக்களத்தில்சார்ஜன்டுகளாக பதவி உயர்வு பெற்றனர்.

திணைக்களம் இது சம்பந்தமாக நடத்திய போட்டிப் பரீட்சையில் 150 பேர் கலந்து கொண்டனர்.

30 பேர்களுக்கே பதவி உயர்வு கிடைத்தது. இவர்களில் 3 பேர் மட்டுமே தமிழர்கள். (இ-எ)

### விவசாயிகள் பாதிப்பு

வண்டத்தமிப்பு செப். 10

மழை இல்லாததால் வட பகுதி விவசாயிகள் பெரும் கவலையும் ஏக்கமும் கொண்டுள்ளனர்.

நீரிறைக்கும் இயந்திரத்துக்கான மண்ணெண்ணெய், விதைநெல் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-120)

### கட்டட வேலை ஆரம்பம்

கொடிகாமம் செப். 10

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகா வித்தியாலய வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட சுமார் 2 லட்சம் ரூபா செலவில் மேல் மாடி கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)



## பொய்யாமொழி

குறள்:

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண் பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

பொருள்:

தன் உடம்பைப் பெருக்கச் செய்வதற்காகத் தான் மற்றோர் உயிரின் உடம்பைத் தின்கின்றவன் எவ்வாறு அருளுடையவனாக இருக்கமுடியும்?

## வாசகர் திருமுகம்

### யாழ் மாவட்டத்தின் ஒரே ஒரு கடற்றெழில் துறைமுகம் சிதைவுறுகிறது

யாழ் மாவட்டத்தின் ஒரேயொரு கடற்றெழில் துறைமுகம் மயிலிட்டியிலேயே அமைந்துள்ளது. இலங்கையின் வட கரையோர மீன்பிடித் தொழில் அபிவிருத்தி செய்யுமுகமாக 1965-1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது.

வலித்தூண்டல், காங்கேசன்துறை, ஊறணி மயிலிட்டி, பலாலி, வளலாய், தொண்டைமானறு, வல்வெட்டித்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கடற்றெழிலாளர்கள் இத் துறைமுகத்தால் பெரிதும் பயனடைந்து வந்தார்கள்

1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத் துறைமுகத்தின் நீரிணைத் தடுப்புப் பகுதி கடலரிப்பினல் சிதைவுற ஆரம்பித்தது. 1984 ஆம் ஆண்டில் இச் சிதைவு வியாபித்து, நீரிணைத்தடுப்புப் பகுதியின் ஒரு பகுதி முற்றுகச் சேதமுற்றது.

இது பற்றி இலங்கைக் கடற்றெழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இத் திருத்தவேலைகளுக்கான நிதி வசதி இலங்கை கடற்றெழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்திடம் இல்லை என்பதை எடுத்துக் கூறிய பிரஸ்தாப கூட்டுத்தாபனம், இதற்கான நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுதிட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தருமாறு 18-4-84 இல் யாழ் மாவட்ட அமைச்சைக் கோரியது. ஆனல் இதுவரை இந்நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் கடற்றெழில் அமைச்சோ அன்றி இலங்கைக் கடற்றெழில் துறைமுகக் கூட்டுத்தாபனமோ யாழ் மாவட்டத்தில் எதுவித அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ள மாட்டாது என்பது யாவரும் அறிந்ததே

ஆகவே இவ்வேலை கடற்றெழில் அமைச்சைச் சார்ந்தது என்றோ அல்லது இலங்கைக் கடற்றெழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தைச் சார்ந்தது என்றே கருதி, யாழ் மாவட்ட அமைச்சும் மௌனம் சாதிப்பது முறையாகாது.

அதனல் வரும் தீங்கு, யாழ் மாவட்டக் கடற்றெழிலாளர்களையே வெகுவாகப் பாதிக்கும் என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் இத் திருத்தவேலைகளுக்காக நான்கு இலட்சம் ரூபா போதுமானது ஆனல் நீரிணைத் தடுப்புப்பகுதி முற்றுகச் சிதைவுறுமானல், நாற்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்தாலும், துறைமுகத்தைச் சீரமைக்க முடியாது இத் துறைமுகம் சிதைவுறும் பட்சத்தில் சுமார் 200 பெரிய படகு உரிமையாளர்களும் சுமார் 1000 சிறு படகு உரிமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

வட கரையின் மீன்பிடித் தொழிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடையலாம். ஆகவே இத் துறைமுகத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்-

து. மு. சிவபாதம்
செயலாளர், கடற்றெழிலாளர் நலன் புரிச் சங்கம் மயிலிட்டி

## பிரஜைகள் குழு மகஜர்

மட்டக்களப்பு செப். 10

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் திரபராதிகள்தொடர்ந்து ஆயுதப் படையினரால் கைது செய்யப்படுவது தொடர்பாக மட்டக்களப்பு-அம்பாறை பிரஜைகள் குழு ஜனதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இது தொடர்பாக குழுவினரால் மகஜரொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.



# உதயன்

10 09-1986 புதன்கிழமை



* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/-
* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்

KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628


# கைதான பின் காணுமற்போன தமிழர்களுக்கு என்ன நடந்தது?

## அரசிடம் விளக்கம் கோருகிறது மன்னிப்புச்சபை

அரச ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் பல நூறு தமிழர்கள் எப்படிக் காணுமற்போனர்கள் என்பதற்கு விளக்கம் தரும்படி சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

நேற்று லண்டனில் வெளியிடப்பட்ட சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னிப்புச்சபை, இலங்கை சம்பந்தமாக 89 பக்க அறிக்கையை லண்டனில் வெளியிட்டது.

இலங்கை அரசு அங்கு உள்ள தமிழ் மக்கள் மீது அக்கிரமங்களை நடத்தி வருவதாகவும் மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் குற்றஞ் சுமத்தியுள்ளது.

கடந்த 20 மாதங்களில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட 272 தமிழர் பற்றிய விவரங்கள் அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட பல தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல தமிழர்கள் சாகும் வரை சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர், கொல்லப்பட்ட தமிழரின் சடலங்கள் எரிக்கப்பட்டுள்ளன! சில இடங்களில் புதைக்கப்பட்டுள்ளன.

—இப்படி மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (உ-எ)


### அறிவித்தல்

யாழ் நகரில் 15.09.86 திங்கள் நடைபெற இருந்த இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் மறு அறிவித்தல்வரை பின் போடப்பட்டுள்ளது.

வி.எஸ். தங்கவடிவேல்
கௌரவ பொதுச்செயலாளர்


## கோட்டையிலிருந்து சிப்பாய்களை அகற்ற சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப், 10

கோட்டை இராணுவ முகாமில் இருந்து சிப்பாய்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள நீதிமன்றத்தையும் செயலகத்தையும் கோட்டைக்குள் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியைக் கோரும் தந்தி ஒன்றை யாழ் சட்டத்தரணிகள் சங்கம் அனுப்பியுள்ளது.

கோட்டையில் இருந்து ஆஸ்பத்திரி மீது நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களை ஆட்சேபித்தும் இந்தத் தந்தி அனுப்பப்பட்டுள்ளது. (இ-10)


### அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

அடைக்கலநாயகி திருநாளை முன்னிட்டு உயரப்புலம், ஆனைக்கோட்டையில் இழுக்கப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பரிசு பெற்றோர் விபரம் நாளைய 'உதய'னில் வெளிவரும்.

ஏற்பாட்டாளர்கள்


## இன்று

யாழ்ப்பாணம், செப். 10

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் இன்று நிறுவியோர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெறுகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் திரு ராஜசமுமாரத்தினம் தலைமையில் இந்த வைபவங்கள் நடைபெறும். (இ-10)

## ஜி. சி. ஈ. பரீட்சை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப். 10

"ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை; விண்ணப்பிக்கத் தவறிய பரீட்சார்த்திகளுக்கு மற்றுமொரு சந்தர்ப்பம்" என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளியான செய்தியில் இரண்டு திகதிகள் பிழையாக அச்சாகிவிட்டன.

"ஜி. சி. ஈ. சாதாரண தர டிசம்பர் 1986 பரீட்சை என்றும் விண்ணப்பங்கள் 15.9.86க்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளைத் திருத்தி வாசிக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். (அ-எ)


### தேவை

அச்சுக்கோப்பாளர் (பயிலுநர்)

அச்சுக்கோப்பாளர் (பயிலுநர்) பதவிக்கான ஆட்கள் தேவை

வயது: விண்ணப்பதாரர் 18 வயதுக்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும். 18 — 20 வயதுக்குட்பட்டவர்களுக்குத் தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும்.

கல்வித்தகைமைகள்: க.பொ.த.ப. (சா. த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

க. பொ. த. ப. பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் 'ஏ', 'பி', 'சி' தரங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* யாழ் - மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்தனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் உதயன், த. பெ. எண் - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 20.09.86க்கு திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.


## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப் 10

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை சம்பந்தமான இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு அ. சா கந்தசாமி நேற்று மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதம் ஒத்திப் போடப்பட்டது.

வடமாநிலக் கல்வி அலுவலக அதிகாரிகள் நேற்றுத் தம்மிடம் அளித்த உறுதிமொழியின் பிரகாரம் திரு கந்தசாமி தனது உண்ணாவிரதத்தை ஒத்திப்போட்டார்.

கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறின் இது தொடர்பான நடவடிக்கைகள் மேலும் தொடரும் என்று திரு கந்தசாமி அறிவித்திருக்கிறார்.

வித்தியாசாலையில் இடை நிறுத்தி வைக்கப்பட்ட ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்; இடிந்துவிழும் நிலையில் உள்ள மாடிக் கட்டடம் திருத்தப்படவேண்டும்- இவைதான் திரு கந்தசாமியின் கோரிக்கைகள். (உ-எ)

## ஹராரே பயணம் குறித்து சபையில் விவாதம்

கொழும்பு, செப் 10

ஹராரே பயணம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இப்பயணம் குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமர் பிரேமதாஸ அறிக்கை சமர்ப்பித்த பின்னர் சுதந்திரக் கட்சி எம் பி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி இது விஷயமாக விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

திரு. ஜெயக்கொடியின் கோரிக்கைக்குப் பிரதமர் இணக்கம் தெரிவித்தார். (உ-எ)

## தவறுன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பேசியிருக்கவேண்டும்.

இந்தியாவுக்கும் பிரச்சினைகள் பல உண்டு.

— இப்படி பிரதமர் பிரேமதாச தனது அறிக்கையில் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடன் ஹராரேயில் வைத்து நடத்திய பேச்சுக்களின் விவரங்களைப் பற்றியும் பிரதமர் பிரேமதாஸ தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தான் கொடுத்த யோசனைகளில் இருந்து பின்வாங்கி விட்டதா? — இப்படி இராஜீவ் என்னைக் கேட்டார்.

நான் உடனடியாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டேன். அப்படி இல்லை என்று பின்னர் நான் அவருக்குத் தெரிவித்தேன்.

நாட்டின் ஒற்றையாட்சித் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்று நான் இந்தியப் பிரதமருக்குத் தெரிவித்தேன்.

—இப்படி பிரதமர் பிரேமதாஸ தமது அறிக்கையில் தெரிவித்து இருந்தார். (உ-எ)

## வீர அஞ்சலி

யாழ்ப்பாணம், செப் 10

கடந்த திங்கட்கிழமை அரச படைகளுக்கு எதிராக நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்குத் தமிழீழ இராணுவம் வீர அஞ்சலி செலுத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறது. (உ)

## 'ஷெல்' துண்டை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர், சுகாதார பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள், மருத்துவ மாணவர்கள், ஊழியர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

காலை சுமார் பத்து மணிக்கு யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியூடாகச் சென்று யாழ் செயலகத்தை அடைந்தது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த ஊர்வலம் சுலோகங்கள் எதுவும் இன்றி மௌனமாகவே நடைபெற்றது.

யாழ் செயலகத்தை ஊர்வலம் அடைந்ததும் யாழ்-அரசாங்க அதிபரின் அலுவலகத்தினுள் அனைவரும் சென்றனர்.

யாழ் - ஆஸ்பத்திரியில் விழுந்து வெடித்த ஷெல்லின் பாகங்களை யாழ் அரச அதிபரிடம் வைத்திய அத்தியட்சகர் காண்பித்தார்.

இதனை அடுத்து ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் பற்றியும் அங்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றியும் எடுத்துக் கூறும் மகஜர் ஒன்று அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் பேசுவதாகவும் ஒரு சில வைத்தியர்களைத் தவிர ஏனைய ஊழியர்களை தமது அலுவலகத்தை விட்டு வெளியேறுமாறும் அரசஅதிபர் கேட்டுக்கொண்டார்.

அமர்ந்து கொண்டனர்

அப்பொழுது வைத்திய நிபுணர் ஒருவர் அலுவலகத்தினுள் நிலத்தில் அமர்ந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து ஏனைய வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் நாம் வெளியேறமாட்டோம் அமைச்சர் இப்போதே நீங்கள் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு தாமும் தரையில் அமர்ந்துகொண்டனர்.

அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சுடனும், போதனா வைத்தியசாலை அமைச்சுடனும் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ள முயன்றார்.

அங்கு அமைச்சர்கள் எவரும் இருக்கவில்லை.

இறுதியில் அமைச்சர் தொண்டமானுடன் அரச அதிபர் தொடர்பு கொண்டு தற்போதைய நிலை குறித்து எடுத்துக் கூறினார்.

இதனை அடுத்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்க்குமாறு அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-10)

## உண்ணாவிரதம்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது.

"விடுதலைசெய்யுங்கள்; அல்லது நீதிமன்றம் கொண்டு செல்லுங்கள்" என்று கோரியே அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று அறியப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்த தமிழ்க்கைதிகள் பல மாதங்களாகத் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

## அக்காவின் திருமணப் பந்தலில் தம்பியின் மரணச் சடங்கு

அச்சுவேலி. செப் 10

அக்காவின் திருமணப்பந்தலில் தம்பியின் மரணச்சடங்கு நடைபெற்றது.

இந்தச் சம்பவம் புத்தூரில் நிகழ்ந்தது.

இது பற்றிக் கூறப்படுவதாவது;-

அக்காவுக்கு மிகவும் ஆடம்பரமான முறையில் திருமணம் நடைபெற்றது. இளையதம்பியார் மணப்பந்தலில் இருந்து உணவருந்திவிட்டு விளையாடச் சென்றார்.

சகதோழர்களுடன் நாவல்மரம் ஒன்றில் ஏறி அவர் விளையாடிக் கொண்டிருந்தபோது மரத்தின் உச்சியில் இருந்து தவறி விழுந்து பண்டைசிதறிய நிலையில் மரணமடைந்தார்.

இந்த துக்ககரமான சம்பவம் திரு.பொ. சரவணை என்பவரின் இல்லத்தில் திங்கட்கிழமை நிகழ்ந்தது. மரத்தில் இருந்து விழுந்து மரணமான சிறுவன் சரவணை குகவேல். வயது 12 (இ-11)

## எரிபொருள் விலை நகரில் தணிந்தது

யாழ்ப்பாணம், செப். 10

நேற்று யாழ்ப்பாணத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெருந்தொகையான வாகனங்கள் நீண்ட கியூவில் தரித்து நின்று எரிபொருள் நிரப்பின.

ஒரு லீற்றர் பெற்றோல் 17ரூபா 50 சதமாக அங்கு விற்கப்பட்டதே இதற்குக் காரணம்.

வடமாகாண எரிபொருள் விநியோகிப்போர், முகவர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளே காரணமாகவே மண்ணெண்ணெய் டீசல், பெற்றோல் என்பன கட்டுப்பாட்டு விலையில் பல முகவர் நிலையங்களில் விற்கப்பட்டன.

எனினும் சில தனிப்பட்ட வியாபாரிகள் ஒரு லீற்றர் பெற்றோல் 25 ரூபாவாக நேற்று விற்பனை செய்தனர். (உ-5)

## முல்லைத்தீவில் ரொக்கட் தாக்குதல்

யாழ்ப்பாணம் செப். 10

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் சென்றிக்கு நின்ற அதிரடிப் படையினர் மீது போராளிகள் ரொக்கட் தாக்குதல் மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது.

இதனை அடுத்து அதிரடிப்படையினரும் திருப்பித் தாக்கினராம்.

இதனால் அதிரடிப் படையினர் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிய வருகிறது. (இ-10)

## மன்னாரில் மோதல்

யாழ்ப்பாணம், செப். 10

'மன்னாரில்'' திங்கள் இரவு அதிரடிப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இதேவேளை அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதல் ஒன்றில் பல பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலதிக விவரம் எதுவும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (இ-10)

## ஹெலி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அனைவரும் பதுங்குகுழியில் இருந்தமையால் எவ்வித சேதமும் அடையவில்லை. (உ-118)

## குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு நகரில் நேற்று இரவு 7 மணியளவில் குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்றும் அதைத் தொடர்ந்து துப்பாக்கி வெடிச்சத்தங்களும் கேட்டன என்றும் நகரவாசிகள் தெரிவித்தனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து கால் மைல் தொலைவில் இச்சத்தங்கள் கேட்டன எனவும் கூறப்படுகின்றது. (உ-எ)

## சிறுமியும் மரணம்

யாழ்ப்பாணம், செப்.10

திங்கட்கிழமை பருத்தித்துறையில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி ஒருத்தி நேற்று மரணமானர்.

செல்வராசகம் கமலி (வயது 8) என்ற சிறுமியே மரணமானவர் ஆவார்.

பிரேதப் பரிசோதனை நேற்று நடத்தப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-10)

## இரவு நேர நோட்டீஸ்

யாழ்ப்பாணம், செப் 10

நேற்றிரவு 7 மணியளவில் யாழ்நகரப்பகுதியில் ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

'யாழ்ப்பாண மக்களே' என்ற தலைப்புடன் காணப்பட்ட இத்துண்டுப் பிரசுரத்தில் அடிக்குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை (உ-10)

## கைகலப்பில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், செப்10

யாழ். பத்திரியூஸ் வீதியில் நேற்று நடைபெற்ற இரு கோஷ்டிகளுக்கான கைகலப்பு ஒன்றில் நான்குபேர் வாள் வெட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

இவர்கள் அனைவரும் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

வீதியில் குப்பை கொட்டுவது தொடர்பாக எழுந்த சச்சரவே வாள் வெட்டில் முடிந்ததாகக் கூறப்படுகிறது. (உ-10)

## பேராதனையில் மாணவர் மோதல்

கொழும்பு, செப் 10

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிமோதலில் இரண்டு பொறியியல் மாணவர்கள் காயமடைந்தனர். (உ-எ)


கடரோளி சூரியகுமாரனுக்கு நித்தியா ஸ்ரோஸின் அஞ்சலி

உள்ளங்களில் உறைபவனே
ஊருக்காய் வாழ்ந்தவனே
எல்லோருக்கும் ஏற்றவனே
ஏணியாய்த் திகழ்ந்தவனே,

அமரர் சூரியகுமாரனுக்கு எங்கள் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

நித்தியா ஸ்ரோர்ஸ்

No. 9, நவீன சந்தை யாழ்ப்பாணம்.



# நிப்பொன் ரெலி ரவல்ஸ் (பிறைவேற் லிமிற்.,)

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தி, 2G ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொ.இல:- 23364

உலகின் எப்பாகத்திற்கும் ரெலக்ஸ் ரெலிபோன் சேவை

3 நிமிடம்

| | |
|---|---|
| இந்தியா | 199/- |
| மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா | 230/- |
| பிரான்ஸ், நோர்வே, மே. ஜேர்மன் | 260/- |
| கனடா | 320/- |
| சவூதி அரேபியா, இங்கிலாந்து | 260/- |

For your INTERNATIONAL TELEX and TELEPHONE SERVICES contact PHONE 23364 - 23866

NIPPON TELE TRAVELS
2G, STANLEY ROAD JAFFNA SRI LANKA.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 10 - 09 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA,

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Numder QJ 60 N86


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org